பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 09 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

# <u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 2024-ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகளை இன்று வழங்கினார்.

2. நடிகர்கள் மம்முட்டி, தனுஷ், இசையமைப்பாளர் ஜி வி பிரகாஷ் உள்ளிட்டோர் விருது பெற்றனர்.

3. இளைஞர்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாவதை தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

4. உடான் திட்டத்தின் அடுத்தக்கட்டமாக நாடு முழுவதும் 100 புதிய விமான நிலையங்கள் அமைக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிர் **Wushu 60** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Roshibina Devi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

குடியரசுத்தலைவர் திருமதி. திரெளபதி முர்மு, **2024**-ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகளை இன்று வழங்கினார்.

குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில், திரைத்துறையின் உயரிய விருதான தாதா சாஹேப் பால்கே விருது நடிகர் அனந்த் நாக்கிற்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான விருது பிரம்மயுகம் மலையாள படத்திற்காக மம்முட்டிக்கும், சிந்து சாம்பியன் ஹிந்தி படத்தில் நடித்த கார்த்திக் ஆர்யனுக்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

கேப்டன் மில்லர் படத்திற்காக சிறந்த நடிகருக்கான சிறப்பு விருதையும், சிறந்த தமிழ் படமாக தேர்வு செய்யப்பட்ட ராயன் படத்திற்கான விருதையும் நடிகர் தனுஷ் பெற்றுக்கொண்டார்.

***(Sound Byte — தனுஷ் — 5 Sec. )***

சிறந்த இசையமைப்பாளருக்கான விருது அமரன் படத்திற்காக ஜி.வி.பிரகாஷ்குமாருக்கு வழங்கப்பட்டது.

***Sound Byte - ஜி.வி.பிரகாஷ் - 10 Sec. )***

சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதை, மகாராஜா படத்தில் நடித்த **Sachna Namidass** பெற்றுக் கொண்டார்.

சிறந்த ஒலிப்பதிவுக்கான விருது மெய்யழகன் படத்திற்காக **G.Suren**-க்கும், சிறந்த குறும்படத்திற்கான விருது ப்ளூ படத்திற்காக ஹரிஹர சுதனுக்கும் வழங்கப்பட்டது.

<<<<<>>>>>>

இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதை தடுக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மாநில போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், **2047**-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் இலக்கை எட்டுவதற்கு போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பின் புதிய இணையதளத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

இளைஞர்களிடையே போதைப்பொருள் பழக்கத்தின் தீமைகள் குறித்து எடுத்துரைக்கும் நான்கு தொலைக்காட்சி விளம்பரங்களையும் அவர் தொடங்கிவைத்தார்.

லக்னோவில் போதைப்பொருள் தடுப்பு அலுவலகம் மற்றும் அலுவலர் குடியிருப்புக்கான அடிக்கல்லையும், டேராடூன் புதிய போதைப்பொருள் தடுப்பு மண்டல அலுவலகத்தை திறந்துவைத்தும் திரு அமித் ஷா பேசினார்.

<<<<<<>>>>>>

விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க, வேளாண் துறையில், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை பயன்படுத்துவது அவசியம் என்று, மத்திய சாலைப்போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில், சர்க்கரை ஆலைகளுக்கான தேசிய விருதுகளை வழங்கிப் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயிகளின் முன்னேற்றம் இன்றியமையாதது என்றார்.

நாட்டில் சர்க்கரை ஆலைகளுக்கு சிறப்பான எதிர்காலம் உள்ளதாக கூறிய அவர், இந்த ஆலைகளில், எத்தனால் போன்ற உப பொருட்கள் உற்பத்தியில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உடான் திட்டத்தின் அடுத்தக்கட்ட பணிகளை மேற்கொள்வதற்கு நாட்டின் 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு, மத்திய அரசு மேற்கொண்டுவரும் புரட்சிகரமான திட்டங்களில் ஒன்றாக உடான் விளங்குகிறது என்று குறிப்பிட்டார்.

நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் உள்ள சிறிய நகரங்களுக்கும் குறைந்த செலவில் விமான சேவை கிடைப்பதற்கு இந்த திட்டம் வழிவகுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உடான் திட்டத்தின்கீழ், 100 புதிய விமான நிலையங்களும், 200 நவீன ஹெலிகாப்டர் தளங்களும் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ், மேலும் நான்கு கோடி மக்கள் விமான சேவையை பயன்படுத்துவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் உடான் திட்டத்தின்கீழ் 80 விமான நிலையங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், ஒரு கோடியே 54 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் குறைந்த கட்டணத்தில் விமான சேவையை பயன்படுத்தி வருவதாகவும் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<<>>>>>>

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வை, முறைகேடுகளின்றி நடத்தும் வகையில், கணினி அடிப்படையிலான தேர்வு முறையை செயல்படுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக, மத்திய அரசு, உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, மத்திய கல்வித்துறை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாணப் பத்திரத்தில், தேசிய தேர்வு முறையில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடப்பிரிவு சார்ந்த வல்லுநர்களுக்கு முக்கியத்துவம் அளித்து, பிரிவு அலுவலர் முதல் இணைச் செயலாளர் நிலை வரை, 14 புதிய அதிகாரிகள், கடந்த மாதம் நியமிக்கப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தேசிய தேர்வு முகமை-க்கு, மத்திய அரசின் செயலாளர் நிலையில், தலைமை இயக்குநர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>>

எரிசக்தித் துறையில், ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த, இந்தியாவும் — எண்ணெய் ஏற்றுமதி நாடுகளும் முடிவு செய்துள்ளன.

பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு.ஹர்தீப் சிங் புரி, புதுதில்லியில் இன்று எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பின் தலைமைச் செயலாளர் திரு. **Haitham Al Ghais**-ம் பங்கேற்ற உயர்மட்டக் கூட்டத்தில், இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

எண்ணெய் சந்தையில் நிலைத்தன்மையை ஏற்படுத்தி, எரிசக்தி பாதுகாப்பை உறுதி செயவதோடு, பெட்ரோலியத் தொழில் துறையில், தேவையான முதலீடுகளை, உரிய நேரத்தில் மேற்கொள்வது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

சர்வதேச சந்தையில், கச்சா எண்ணெய் விற்பனையில் வெளிப்படைத் தன்மை பின்பற்றப்படுவதற்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

சர்வதேச எரிசக்தி சந்தையை, சமச்சீரான மற்றும் நிலையானதாக மாற்ற, இந்தியாவும் - எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பும், மேலும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு.ஹர்தீப் சிங் புரி வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

ஜப்பானின் விடுதலை ஜனநாயக கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று புதுதில்லியில் வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரியை சந்தித்து பேசியது.

இக்குழுவின் தலைவர் திரு **Taro Kono** தலைமையிலான குழுவினர், நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து திரு விக்ரம் மிஸ்ரியுடன் ஆலோசனை நடத்தினர்.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருதரப்பிலும் ஆக்கப்பூர்வமான கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் இருநாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான தொழில்நுட்ப பகிர்வு, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் ஆகியவை குறித்தும் ஜப்பான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதித்தனர்.

இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி ஊக்கமளிக்கும் வகையில் இருப்பதாகவும் ஜப்பான் தலைவர்கள் கூறினர்.

இந்தியா — ஜப்பான் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

இந்தோ — பசிபிக் மண்டலத்தில் அரசியல் நிலைப்பாடு, அமைதி மற்றும் வர்த்தகத்தை உறுதி செய்வது குறித்தும் ஜப்பான் நாட்டு தலைவர்கள், வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரியுடன் விவாதித்தனர்.

<<<<<>>>>>>

சிறு வணிகர்களுக்கு, யு.பி.ஐ. பரிமாற்றம் மீதான சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக தேசிய பணப்பட்டுவாடா கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அந்த கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதிய வரிவிதிப்பால் சிறு வணிகர்களுக்கு வரிச்சுமை ஏற்படுவதுடன், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையை பாதிக்கும் என வெளியாகியுள்ள தகவல் உண்மைக்கு மாறானது என்று கூறியுள்ளது.

தனிநபர் ஒருவர், வணிக நிறுவனங்களில் 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே, வரி விதிக்கப்படும் என்றும், இரண்டாயிரம் ரூபாய் வரையிலான

பரிவர்த்தனைகளுக்கு வரி ஏதும் இல்லை என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் மேற்கொள்ளப்படும் மொத்த யு.பி.ஐ. பரிவர்த்தனையில், 96 சதவீத அளவிற்கு, இரண்டாயிரம் ரூபாய்க்கு குறைவாகத்தான் உள்ளது என்றும் அந்த செயதிக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான அம்சங்களில், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இருநாடுகளும் உறுதி பூண்டுள்ளன.

**Oslo**-வில் நடைபெற்ற இந்தியா — நார்வே கூட்டுக்குழுவின் 12-வது கூட்டத்தில், கடல்சார் மாசுபாடு, சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, பிளாஸ்டிக் மற்றும் ரசாயணப் பொருட்கள் பயன்பாடு, கழிவுப் பொருட்கள் மறுசுழற்சி மற்றும் ஆழ்கடல் மேலாண்மை உள்ளிட்ட அம்சங்களில், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக, நார்வேக்கான இந்திய தூதரகம் தெரவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில், இந்தியாவின் சார்பில், மத்திய சுற்றுச்சூழல் — வனத்துறை செயலாளர் திரு.தன்மய் குமார் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

ஆசிய விளையாட்டுப்போட்டியின் மகளிர் Wushu 60 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Roshibina Devi அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், ஆடவர் 56 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Aryan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பேட்மிண்டன் குழு பிரிவில் இந்தியா 3-0 என்ற கணக்கில் ஜப்பானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

ஆடவர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 16-1 என்ற கோல்கணக்கில் இலங்கையை வென்றது.

<<<<<END>>>>>>